# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 13.05.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 7861/F/2024**

| | | |
|---|---|---|
| திரு.முருகானந்தம் | .. | மேல்முறையீட்டாளர் |

/எதிர்/

| | | |
|---|---|---|
| பொதுதகவல் அலுவலர்/<br>அரசு சார்புச் செயலாளர்,<br>வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத்துறை,<br>தலைமைச் செயலகம்,<br>சென்னை. | .. | பொது அதிகார அமைப்பு |

## ஆணை

இவ்வாணையத்தில் இன்று 13.05.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.முருகானந்தம் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள் 2012, விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலர் திரு.வே.காசிவேல், பிரிவு அலுவலர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத்துறை, தலைமைச் செயலகம், சென்னை ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், 31/01/2024 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில் Please provide the certified copy of the Government

Order GO.No.230 of Housing and Urban Development, dated 19.02.1991 என்பன போன்ற தகவல்களைக் கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் தகவல் வழங்கவில்லை. மனுதாரர் தனக்கு தகவல் வழங்கவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(1)ன் கீழ் 18.03.2024 நாளிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் தகவல் வழங்கவில்லை. இந்நிலையில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 19(3)ன் கீழ் 13.06.2024 நாளிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (13.05.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜரான பொதுதகவல் அலுவலர் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து 06.05.2026 தேதியிட்ட கடிதம் மற்றும் இணைப்புகள் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதாக கூறி அதற்கான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. **இன்று விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு ஆணையத்தால் மனுதாரருக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணை Addressee deceased என ஆணையத்திற்கு திருப்பப்பட்டுள்ளது. எனவே, பொது அதிகார அமைப்பினால் 06.05.2026 தேதியிட்ட கடிதம் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதை இவ்வாணையம் ஏற்கிறது. இருப்பினும் கீழ்கண்ட ஆணையை பிறப்பிக்கிறது.**

- **“மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் மனுதாரர் கோரியுள்ள தகவலை உரிய காலத்தில் வழங்காத அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் திரு.A.ஜானகிராமன், அரசு சார்புச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத்துறை, தலைமைச் செயலகம், சென்னை-09 அவர்களுக்கு சட்ட பிரிவு 20(1) மற்றும் 20(2)ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்து மூல விளக்கத்தினை 18.06.2026 அப்போதைய பொதுதகவல் அலுவலர் அவர்கள் ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறது”.**

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 7861/F/2024</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுதகவல் அலுவலர்/
அரசு சார்புச் செயலாளர்,
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை.

**அப்போதைய பொதுத்தகவல் அலுவலர்,**
அரசு சார்புச் செயலாளர்,
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை.
**(தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் வாயிலாக)**

**<u>மேல்முறையீட்டாளர்:-</u>**

திரு.முருகானந்தம்,
1/16, முத்து நகர்,
கோட்டப்புலிப்பாளையம் ரோடு,
தாராபுரம்,
திருப்பூர்-638657.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

Copy to file: KR/PA